(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

7 சைவசமய பாடப்பரீட்சை : 2023

தரம் ஏழு



nselva.com

காலம் அளவு	1.30 மணி
புள்ளிகள் : 100	

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. திருச்சிராப்பள்ளிக்கும், திருவானைக்காவிற்குமிடையே அமைந்துள்ள ஆற்றின் பெயர் என்ன?
   1) யமுனை ஆறு 2) கங்கை ஆறு 3) காவிரி ஆறு 4) நர்மதா ஆறு
2. பின்வருவனவற்றுள் பஞ்ச புராணங்களுள் அடங்காதது எது?
   1) திருவாசகம் 2) சிவபுராணம் 3) திருப்பல்லாண்டு 4) தேவாரம்
3. ''உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யாதே'' இக் கூற்றினால் வெளிப்படுத்தப்படும் நல்லொழுக்கம் எது?
   1) பணிவு 2) பொறுமை 3) இரக்கம் 4) நன்றி மறவாமை
4. கந்தபுராணத்தின் ஆசிரியர் யார்?
   1) கச்சியப்ப சிவாச்சாரியார் 2) மாணிக்கவாசகர்
   3) ஆறுமுக நாவலர் 4) அருணகிரிநாதர்
5. திருநாவுக்கரசர் எங்கே திருவவதாரம் செய்தருளினார்?
   1) திருவாரூர் 2) சீர்காழி 3) திருநாவலூர் 4) திருவாதவூர்
6. பறாளை ஈஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம் எது?
   1) மருதமரம் 2) வில்வம் 3) ஆலமரம் 4) புன்னை
7. தட்சணகைலாயம் எனப் போற்றப்படும் திருத்தலம் எது?
   1) மாவட்டபுர கந்தசாமி கோயில் 2) திருக்கோணேஸ்வரம்
   3) திருகோணமலை பத்திரகாளி ஆலயம் 4) திருக்கேதீஸ்வரம்
8. கிருகப்பிரவேச நிகழ்வின் போது தேவர்களையும் பிரம்மாவையும் திருப்தி செய்ய மேற்கொள்ளப்படும் பூசை எது?
   1) மனையடி சாஸ்திரம் 2) வாஸ்து சாந்தி
   3) கோமாதா பூஜை 4) சாயங்கால பூஜை
9. பின்வருவனவற்றில் எது நட்சத்திர அடிப்படையில் அனுட்டிக்கப்படும் விரதம் அல்லாதது?
   1) மாசிமகம் 2) சதுர்த்தி விரதம்
   3) திருக்கார்த்திகை விரதம் 4) பங்குனி உத்தரம்
10. பின்வருவனவற்றுள் வருணனைப் பீடித்த தோஷம் நீங்கிய நாள் எது?
    1) மாசிமகம் 2) தைப்பூசம் 3) பங்குனி உத்தரம் 4) ஏகாதசி
11. சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
    1) இராஜேந்திரச் சோழன் 2) சிவபாத சேகரன்
    3) நம்பியாண்டார் நம்பி 4) 1ம் இராஜராஜ சோழன்

12. போகிப்பண்டிகை யாருக்கு நன்றி கூறும் விதமாகக் கொண்டாடப்படுகிறது?
1) சூரியன் 2) சந்திரன் 3) உழவர் 4) இந்திரன்

13. திருமுருகாற்றுப்படை எனும் பிரபந்தம் எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
1) பதினோராம் திருமுறை 2) பத்தாம் திருமுறை
3) பன்னிரெண்டாம் திருமுறை 4) எட்டாம் திருமுறை

14. முதன்முதலாக கிழக்கிலங்கையில் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் உள்ள ஆலயம் எது?
1) மாமாங்கேஸ்வரம் 2) திருகோணமலை பத்திரகாளி அம்மன்
3) திருக்கோணேஸ்வரம் 4) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

15. ''நத்தார் படை'' என்ற தேவாரம் பாடப்பெற்ற திருத்தலம் யாது?
1) திருக்கோணேஸ்வரம் 2) திருக்கேதீஸ்வரம் 3) முன்னேஸ்வரம் 4) திருவையாறு

16. இறைவனின் பெருமைகளைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் எது?
1) திருவிசைப்பா 2) திருப்பல்லாண்டு 3) திருவாசகம் 4) தேவாரம்

17. ''மாதர்ப் பிறைக்கண்ணி யானை'' என்ற தேவாரத்தின் பண் யாது?
1) புறநீர்மை 2) நட்டபாடை 3) நட்டராகம் 4) காந்தாரம்

18. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் வலம் வரும் தேர்களின் எண்ணிக்கை
1) ஒன்று 2) மூன்று 3) ஐந்து 4) ஏழு

19. ஆலயத்தின் கோபுரத்தைக் கண்டவுடன் இரு கரங்களையும் கூப்பிச் செய்யும் நமஸ்காரத்தின் பெயர் என்ன?
1) பஞ்சாங்க நமஸ்காரம் 2) திரியாங்க நமஸ்காரம்
3) அட்டாங்க நமஸ்காரம் 4) ஏகாங்க நமஸ்காரம்

20. திருநாவுக்கரசர் பாடிய முதல் தேவாரம் எது?
1) மாதர்ப் பிறைகண்ணி யானை 2) நங்க டம்பனைப் பெற்றவள்
3) கூற்றாயினவாறு 4) தோடுடைய செவியன்

21. இறைவனோடு தோழமை பூண்டு யோக நெறியில் நின்ற சமயக்குரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

22. ''சுக்கிரவாரம்'' என அழைக்கப்படும் கிழமை எது?
1) வெள்ளிக்கிழமை 2) திங்கட்கிழமை 3) செவ்வாய்க்கிழமை 4) புதன்கிழமை

23. திருஞானசம்பந்தரின் தந்தையார் பெயர் என்ன?
1) சடையனார் 2) புகழனார் 3) சம்புபாதாசிரியர் 4) சிவபாத விருதயர்

24. மாணிக்கவாசகர் கிட்டத் தட்ட எத்தனை ஆண்டுகள் வாழ்ந்து இறைபதம் அடைந்தார்.
1) 81 ஆண்டுகள் 2) 32 ஆண்டுகள் 3) 18 ஆண்டுகள் 4) 16 ஆண்டுகள்

25. இராமநாதன் எப்பொழுது பிரபுபட்டம் (Sir பட்டம்) பெற்றார்?
1) 1921 2) 1923 3) 1911 4) 1879

(25 புள்ளிகள்**)**

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?
2. சுந்தரமூர்த்தி நாயனாரை வளர்த்த மன்னன் யார்?
3. ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்றும் கூற்றைக் கூறியவர் யார்?
4. திருமுறைகள் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?
5. ஒரே நாளில் நூற்று எட்டுமுறை கோதாவரி நதியில் நீராடும் பேறு பெற்றவர் யார்?
6. உக்கிர சோழ மன்னனின் புதல்வியின் பெயர் என்ன?

7. சீதையம்மன் ஆலயத்தில் இராமன், சீதையைத் தவிர காணப்படும் மூலமூர்த்திகள் இருவரைக் குறிப்பிடுக.
8. ஸ்ரீ பஞ்சாசரத்தில் எத்தனை உரு செபித்தல் வேண்டும்?
9. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரம் செய்தார்?
10. திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு வழங்கப்படும் வேறொரு திருநாமம் யாது?
11. ''ஒன்று கொலாம் அவர் சிந்தை" எனும் பதிகத்தைப் பாடிய நாயன்மார் யார்?
12. சேர். பொன். இராமநாதனின் தாய் தந்தையர் பெயரைக் குறிப்பிடுக?
13. ''பொன்னார் மேனியனே" என்ற தேவாரம் எத் தலத்தின் மீது பாடப்பட்டது?
14. தைப்பொங்கலுக்கு வழங்கப்படும் வேறு ஒரு பெயரை குறிப்பிடுக.
15. ஆலயத்திற்குக் கொண்டு செல்லக் கூடிய பூசைப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(15 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "விருது குன்றமா .....” **2."மாதர்ப் பிறைக்கண்ணி .....”**

3. "அம்மையே அப்பா .....” **4."குழலொலி யாழொலி .....”**

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய திருக்குறள்களை எழுதுக.

1. சிறப்(பு) ஈனும் ..... **2. அன்(று) அறிவாம் .....**

3. இருமை வகை தெரிந்து ..... **4. உரன் என்னும் .....**

5. சுவை ஒளி ஊறு .....

(1 x 5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1) சமயம் என்றால் என்ன?

2) திருமுறைப் பாடல்களை ஓதுமுன்னும் பின்னும் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லுவதற்கான காரணம் என்ன?

3) பாடசாலைகள் எவ்வாறு சமயத்தை வளர்க்கின்றன என்பதற்கு சான்றுகள் மூன்று தருக.

(9 புள்ளிகள்**)**

2. 1) ''தன் உயிர்போல பிறர் உயிரையும்" போற்றி வாழ்ந்த அரசன் பெயர் என்ன?

2) மமகார உணர்வுகள் இரண்டு தருக.

3) பஞ்சமா பாதங்களில் ஏதாவது மூன்றினைக் குறிப்பிடுக.

(9 புள்ளிகள்**)**

3. 1. ''தேவார முதலிகள்'' என அழைக்கப்படுபவர்கள் யாவர்?

2. திருமூலர் இயற்றிய திருமந்திரத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் இரண்டு தருக.

3. பெரிய புராணத்தில் உள்ள சிறப்பு என்ன?

(9 புள்ளிகள்**)**

4. 1. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?

2. அச்சோ பதிகம் என்பதற்கான காரணம் யாது?

3. ''நத்தார் படை'' என்னும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புகள் யாவை?

(9 புள்ளிகள்**)**

5. 1. பின்வரும் பதிகங்களைப் பாடியவர்கள் பெயர், சந்தர்ப்பம் குறிப்பிடுக.

பதிகம்	பாடியவர் பெயர்	பாடிய சந்தர்ப்பம்
1) வாழ்க அந்தணர் 2) பண்ணினேர் மொழியாள் 3) மட்டிட்ட புன்னை 4) தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ்		

2. மாணிக்கவாசகர் மந்திரிப் பதவி வகித்தபோது அவருக்கு கிடைத்த பட்டம் யாது?

(8 + 1 = 9 புள்ளிகள்**)**

6. பின்வரும் ஆலயங்களில் ஏதாவது மூன்று ஆலயங்களைத் தெரிவு செய்து அவை ஒவ்வொன்றைப் பற்றியும் மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

அ. திருக்கோணேஸ்வரம்

ஆ. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம்

இ. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்

ஈ. சீதையம்மன் ஆலயம்

உ. திருகோணமலை பத்திரகாளி ஆலயம்

(3 x 3 = 9 புள்ளிகள்**)**